# <u>அவசர கூட்டப்பொருட்கள்</u>

1. நாகர்கோவில் நகராட்சி பகுதியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/தே.பொ.1, நாள்.19.10.2017, 07.12.2017 மற்றும் 13.12.2017 ஆகிய கடிதங்களில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல் படி வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மானம் எண்.810, நாள்.13.12.2017–ல் நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. வரைவு மறுவரையறை முன்மொழிவுகள் மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேற்படி வரைவு மறுவரையறை முன்மொழிவுகள் தொடர்பாக கடந்த 12.01.2018–ம் தேதி வரை ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து 90 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான மண்டல வாரியான தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அலுவலகத்தில் 08.02.2018 அன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. பெறப்பட்ட ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகளில் கோரிக்கைகள் அரசு வழிகாட்டுதலுக்கு முரணாக இருந்ததால் 76 நிராகரிக்கப்பட்டது. மற்றவை 14 ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்போது மாற்றியமைக்கப்பட்ட உத்தேசங்கள் உறுப்பினர், செயலர், மறுவரையறை ஆணையம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/இஜி1, நாள்.31.01.2018–ம் தேதிய கடிதத்தின் படி உரிய வழிகாட்டுதலின் படி தயார் செய்யப்பட்டுள்ளது. நாகர்கோவில் நகராட்சியின் 52 வார்டுகளுக்கான மறுவரையறை கருத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு மாநில வரையறை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.13030/2017/எப்1

**<u>தீர்மானம் எண். 1 – அங்கீகரிக்கப்பட்டது.</u>**

2. நாகர்கோவில் உள்ளூர் திட்ட குழுமத்தால் அகஸ்தீஸ்வரம் வட்டம் நாகர்கோவில் நகராட்சி நீண்ட கரை 'ஏ' கிராமம் நில அளவை எண்கள் 291/4 பி 2 பி, 4 பி 2 சி மற்றும் 4பி2 ஏ பகுதி – இல் 3603.00 ச.மீ பரப்பளவு கொண்ட அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு Layout Frame Work ம.வ(மு)/நா உ.தி.கு எண்.4/2017 –ன் படி நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதலளிக்கப்பட்டதை தொடர்ந்து திரு.B.ஞானமுத்து என்பவர் புல எண்.291/4B2B, 291/4B2C மற்றும் 4B2A அமையும் இடத்தில் உள்ள பூங்காவினையும், மற்றும் சாலையினை நகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு மனு வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி மனை பிரிவில் உள்ள S13 S12 பாகம் பூஙகாவிற்கான இடம் 251.93 ச.மீ மற்றும் மனைபிரிவின் நடுவனைய தென் வடலாக 4.9m அகலம் வடக்கு 135.65 மீ, தெற்கு 145.96 மீ உள்ள 17.04 சென்று 689.945 ச.மீ பாதையையும் நகராட்சிக்கு தானமாக தான பத்திரம் மூலம் பெற அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 15212/2017/எப்1

**தீர்மானம் எண். 2 – அங்கீகரிக்கப்பட்டது.**

3. நாகர்கோவில் உள்ளூர் திட்ட குழுமத்தால் அகஸ்தீஸ்வரம் வட்டம் நாகர்கோவில் நகராட்சி நீண்ட கரை 'ஏ' கிராமம் நில அளவை எண்கள் 318/2C, 319/3 பாகம் –ல் 9189.70 ச.மீ பரப்பளவு கொண்ட அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு Layout Frame Work ம.வ(மு) / நா. உ.தி.கு எண்.3/2017–ல் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதலளிக்கப்பட்டதை தொடர்ந்து திருமதி. பேளின்நளினி திலக் – என்பவர் நீண்டகரை 'ஏ' கிராமம் புல எண் 318/2C மற்றும் 319/3 –ல் அங்கீகாரம் அற்ற மனைப்பிரிவில் உள்ள பூங்கா மற்றும் சாலையினை நகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு மனு வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி பூங்காவிற்கான ஒதுக்கப்பட்டுள்ள மனை எண் 10–ல் 176.00 ச.மீ 4.35 சென்ட் நிலத்தினையும் மனைபிரிவில் உள்ள 7m அகலம் கொண்ட 'ஏ' எண்ணிடப்பட்ட பாதைக்கான 20.210 சென்ட் நிலத்தையும் 'B' எண்ணிடப்பட்ட 6.10m அகலம் கொண்ட பாதைக்கான 6.354 சென்ட் சாலை நிலத்தையும் 'C' எண்ணிடப்பட்ட 7.0m அகலம் கொண்ட பாதைக்கான 8.330 சென்ட் நிலத்தையும் மற்றும் 'D' எண்ணிடப்பட்ட 6.10m அகலம் கொண்ட பாதைக்கான 8 சென்ட்–க்கு சமமான சாலைக்கான இடத்தையும் தானமாக தான பத்திரம் மூலம் பெற அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 15213/2017/எப்1

**தீர்மானம் எண். 3 – அங்கீகரிக்கப்பட்டது.**